IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUR

MCOP 14/2020

Deposition of PW1 witness of Plaintiff/Petitioner/Defendant/Respondent solemnly affirmed by Bench Clerk in OP Section of this court in accordance with the provisions of Oaths Act 1969 (Act 44 of 1969) on 08.08.2025

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | **:** | செல்வி | **Caste** | : | |
| **W/o.** | **:** | ராமன் | **Calling** | : | |
| **Village** | **:** | | **Religion** | : | |
| **Taluk** | **:** | | **Age** | : | |

**முதல் விசாரணை :–**

பின்வரும் ஆவணங்களை என் தரப்பு சான்று ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்

| S.No. | Date | Documents | Remarks |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | 19.01.2018 | கொளத்தூர் காவல்நிலைய FIR in Cr.No. 72/2019 | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.2 | – | விபத்து பதிவேடு | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.3 | – | மகேந்திரா பிக்கப் வண்டியின் MVI Report | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.4 | – | எனது ஆதார் அட்டை | ஜெராக்ஸ் |
| ம.சா.ஆ.5 | – | எனது வங்கி கணக்கு புத்தகம் | ஜெராக்ஸ் |
| ம.சா.ஆ.6 | – | டிஸ்சார்ஜ் சம்மரி | அசல் |
| ம.சா.ஆ.7 | – | மருத்துவ பில்கள் (ரூ.14,441) | அசல் |

**3 ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் ஜரத்தலில் குடியிருக்கிறேன் என்றால் சரிதான். எனக்கு இரண்டு பெண் குழந்தைகள் உள்ளனர். நான் கூலி வேலை செய்து வருகிறேன். நான் விவசாய கூலி வேலை செய்கிறேன். வாழைக்காய் வெட்டுவதற்கு கூலிவேலைக்கு தான் சென்றேன். நான் வேலைக்கு சென்ற வாகனம் சரக்கு ஏற்றும் வாகனம் என்றால் சரிதான். மேற்படி வாகனத்தில் 8 பேர் பயணம் செய்தோம். அந்த வாகனத்தில் வாகனத்தின் உயரத்திற்கு மேல் ஒரு அட்டி போட்டு அதில் வாழைக்காய் கட்டி ஏற்றியிருந்தார்கள் என்றால் சரிதான். வாகனத்திற்கு மேல் லோடு ஏற்றியிருந்ததால் அதனால் நாங்கள் உட்காருவதற்கு எந்த ஒரு பிடிமானமும் கிடையாது என்றாலும் இலை போட்டு

கட்டியிருப்பார்கள் என்றால் சரிதான். பாதுகாப்பே இல்லாமல் டிரைவர் சொல்லிதான் நாங்கள் வாகனத்தின மீது அமர்ந்து சென்றோம் என்றால் சரிதான். வண்டியில் அதிகமாக பாரம் இருந்ததால்தான் டிரைவரால் வாகனத்தை கண்ட்ரோல் செய்யமுடியவில்லை என்று சொன்னால் சரியல்ல. விபத்து நடந்து சேலம் மருத்துவமனையில் ஒரு மாதம் சிகிச்சையில் இருந்தேன் அதன்பிறகு அந்தியூர் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துகொண்டேன். நான் சொல்வது பொய் என்றும் நான் சேலம் மருத்துவமனையில் 6 நாட்கள் தான் சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்றால் சரியல்ல. நான் ராணி மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கு ஆதாரம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சேலம் மருத்துவமனையில் எனக்கு நன்றாக குணமாகிவிட்டது என்று தான் விடுவித்தார்கள் என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என்றாலும் அது உடனே குணமாகிவிட்டது என்றும் எனக்கு எந்த நிரந்தர ஊனமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் இன்றுவரை வேலைக்கு சென்று சம்பாதித்து வருகிறேன் என்றால் சரியல்ல. ஜீப் ஓட்டியவருககு முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் இந்த வழக்கில் டிரைவருக்கான ஓட்டுநர் உரிமம் தாக்கல் செய்யாததால் இன்சூரன்ஸ் கம்பெனி எந்த விதத்திலும் பொறுப்பாகாது என்றால் சரியல்ல. நான் மருத்துவசிகிச்சை அனைத்தும் அரசு மருத்துவமனையில் செய்துகொண்டதால் அதனால் எனக்கு மருத்துவ செலவு ஏற்பட்டது என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் மாதம் 15 ஆயிரம் ரூபாய் சம்பாதித்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இன்சூரன்ஸ் கம்பெனிக்கு எதிராக நான் எந்த பரிகாரமும் கேட்க இயலாது என்றும் நான் வாகனத்தின் ஓட்டுநரையும், அதன் உரிமையாளரையும் தான் பரிகாரம் கேட்கவேண்டும் என்றால் சரியல்ல. பொருட்கள் ஏற்றிச்செல்லும் வாகனத்தில் ஆட்கள் சென்றது பாலிஸி விதிமுறைக்கு எதிரானது என்பதால் இன்சூரன்ஸ் கம்பெனி

எந்தவிதத்திலும் இதற்கு பொறுப்பாகாது என்றால் சரியல்ல. அதனால் 3ம் எதிர்மனுதாரரை பொறுத்து இந்த வழக்கு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல

ஒம்/-செல்வி

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/– R.சரவணபாபு,
சார்பு நீதிபதி,
மேட்டூர்.